**Judicial Form No**.53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr**.**P**.**C**.)
**IN THE COURT OF JUDICIAL MAGISTARATE, SULUR.**

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions

CRLMP No. 4606 of 2023

Depositions of PW - 2 witness for ________ Prosecution / Defence / Court

| | | |
|---|---|---|
| Name | : | செங்கோட்டு வேலவன் |
| Father's Name | : | சண்முகம் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 14th **day of February** 2025.

**பிரமாண வாக்குமூலம் –**

1. எனக்கும் வாதி குடும்பத்திற்கும் நல்ல பழக்கம் உள்ளது. நான் ஜோதிடம் மற்றும் வாஸ்து பார்க்கும் தொழில் செய்து வருகிறேன். என்னிடம் புகார்தாரருடைய குடும்பத்தினர் ஜாதகம் பார்க்கும் வகையில் எனக்கு அவர்கள் நன்கு பழக்கமானவர்கள் ஆவார்கள். புகார்தாரர் அடிக்கடி ஜாதகம் பார்க்க என்னிடம் வருவார். மேலும் புகார்தாரரின் தாயார் ஜானகி உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் அவர்களுடைய வீட்டிற்கும் சென்று நான் ஜாதகம் பார்ப்பேன்.

2. புகார்தாருக்கு பூர்வீக சொத்து நீலாம்பூர் மற்றும் முத்துக்கவுண்டன்புதூர் அருகே இருப்பது எனக்கு தெரியும். மேற்படி சொத்துக்கள் குறித்து புகார்தாரருக்கும் எதிரிகளுக்கும் இடையே பாகபிரிவினை வழக்கு நிலுவையில் இருப்பதாக என்னிடம்

கூறியிருக்கிறார்கள். நீலாம்பூர் சொத்திற்கு கிழக்கு பக்கத்தில் உள்ள சொத்தில் வீட்டு மனை பிரித்து போட்டுள்ளார்கள். அவர்கள் புகார்தாரருடைய நிலத்தை சிறிது ஆக்கிரமிப்பு செய்ததால் அவர்களுக்கு எதிராகவும் வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் இருப்பதாக புகார்தாரர் கூறியிருக்கிறார்.

3. புகார்தாரரின் தாயார் ஜானகிக்கு கண்ணில் அறுவை சிகிச்சை செய்திருப்பதாக தெரிய வந்ததன் பேரில் அவரை பார்ப்பதற்காக நான் அவர்களுடைய வீட்டிற்கு 24.06.2022 ம் தேதி சென்றிருந்தேன். அப்பொழுது புகார்தாரர் நீலாம்பூர் தோட்டத்திற்கு செல்லயிருப்பதாகவும் என்னை உடன் வருமாறு அழைத்ததன் பேரில் நானும் அவருடன் சென்றேன். அவர்கள் தோட்டத்திலிருந்த தென்னை மற்றும் தேக்கு மரங்கள் அனைத்தையும் வெட்டி விட்டார்கள்.

4. நாங்கள் சென்றிருந்தபோது 3 பேரும் அவர்களுடன் வேலை செய்யும் நிறைய பேரும் இருந்தார்கள். புகார்தாரரிடன் நான் மரங்கள் வெட்டப்பட்டது குறித்து கேட்டதற்கு அங்கு நின்றிருந்தவர்கள் பங்குதாரர்கள் பர்வதம், ஈஸ்வரன், ரங்கசாமி என்றும், அவர்கள் புகார்தாரருக்கு தெரிவிக்காமல் மரங்களை வெட்டி விட்டதாக கூறினார். ஜேசிபி பதிவெண் டிஎன் 37 டிவி 8436 ல் மரத்தை வெட்டி டிரக் பதிவெண் டிஎன் 66 எல் 9092 ல் ஏற்றி கடத்தி கொண்டிருந்தார்கள்.

5. ஜெயமஞ்சு அவர்களிடம் சென்று எங்களுக்கு தெரியாமல் எப்படி வெட்டலாம் என்று கேட்டார். அதற்கு அவர்கள் அப்படி தான் வெட்டுவோம் என்றும், நீ ஒரு பெண் என்றும், உன்னால் என்ன செய்யமுடியும் என்றும், உன்னால் செய்ய முடிந்ததை செய் என்றும், நீ எங்கு வேண்டுமானாலும், யாரிடம் வேண்டுமானாலும் போ என்றும், எனக்கு மேல் இடத்தில் ஆள் உள்ளது என்றும், ரொம்ப பேசினால் உனக்கும் இதே நிலை ஆகும் என்றும் கூறினார்கள். கெட்டவார்த்தை கூறி திட்டினார்கள்.

6. அதனால் எங்களுக்கு என்ன செய்வது என்று தெரியாமல் சூலூர் காவல் நிலையத்தில் புகார் அளிக்க புகார்தாரர் சென்றார். 2 அல்லது 3 நாட்கள் கழித்து போலீசார் விசாரணை செய்து ஜெசிபி சம்மந்தப்பட்ட நந்தகுமார் மற்றும் டிரக்கின் உரிமையாளர் பழனிசாமி மற்றும் ஆட்களை வாகனங்களுடன் அழைத்து சென்று விசாரித்தார்கள் என்று கூறினார். மேற்படி காவல் நிலையத்திற்கு சென்ற விபரத்தையும் நடந்த விபரத்தையும் தொலைபேசியின் வாயிலாக என்னிடம் கூறினார். அதற்கு பின்னர் தான் இம்மனுவை

தாக்கல் செய்ய முடிவு செய்தோம். புகார்தாரருடன் நான் இடத்திற்கு சென்றதால் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன்.

G RUBANA

Digitally signed by G RUBANA
Date: 2025.02.14 18:16:08 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**